திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே மத்திய அரசாங்கத்திலிருந்து இசைவுக் கடிதம் கிடைத்து விட்டதா? கிடைத்து இருந்தால் என்ன விவரம் சொல்லி அனுப்பியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, மத்திய அரசாங்கம் ஏற்கனவே இந்தத் தொழிலில் உற்பத்தி அதிகம் இருக்கிறது என்பதால் புதிய தொழில் தேவையில்லை என்று கருத்துத் தெரிவித்து இருக்கிறார்கள்.

Stoneware Pipes Unit at Vridhachalam

*273 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any market survey has been conducted by the Stoneware Pipes Unit of the Tamil Nadu Small Industries Corporation Limited at Vridhachalam; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திருப்புவனம் வட்டாரத்தில் கயிறு தயாரிப்புத் தொழில்

*274 வினா—திரு. த. சோனையா : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் வட்டாரத்தில் தென்னை நாரைக் கொண்டு கயிறு தயாரிக்கும் தொழிற்சாலை அரசுத் துறையில் அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, திருப்புவனம் வைகை யாற்றின் இருமருங்கிலும் தென்னை மரங்கள் அதிகமாக இருக்கின்றன. ஆகவே, தென்னை மட்டைகள் அதிகமாகக் கிடைக்கின்றன. அதனால் அரசாங்கம் அங்கே ஒரு தொழிற்சாலையை நிறுவ இனியாவது ஏற்பாடு செய்யுமா?